பாதுகாப்பையொட்டி பலப்படுத்த வேண்டுமென்ற முறையிலே பாதுகாப்புத் துறையின் மூலம் மத்திய அரசு ஏற்றுக் கொண்டு அமைக்கவேண்டுமென்று இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது தேசிய நெடுஞ் சாலை மட்டும்தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படவேண்டியது.

திரு. கே. விநாயகம் : இந்த தேசிய நெடுஞ்சாலை போடப் படாமல் விட்டுப்போன பகுதி எத்தனை மைல் இருக்கிறது ? பெரும் பாலும் கிராமப்புறங்களில் செல்லும் சாலைகளின் ஓரத்திலே வைக் கோலையும் தானியங்களையும் போட்டு உலர்த்தி வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முன்வருமா ? இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வி உபயோக கரமான கேள்வி. நெடுஞ்சாலைகளில் நெல், வைக்கோல் போன்ற வற்றை உலரவைப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. முன்பு நெடுஞ்சாலைப் பகுதிகளில் அழகான பலகைகளை வைத்துப் பார்த்தார்கள், ஆனால் பொது மக்கள் கேட்கவில்லை. இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது உண்மை. ஆனால், அந்தச் சாலையில் அதே சமயத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் நெல் உலர்த்த வேண்டியதற்கு வேண்டிய இடவசதிகளைச் செய்ய வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் 480 மைல். போடப்பட்டிருப்பது 30 மைல். சீர் திருத்தப்பட வேண்டியது 450 மைல்.

திரு. சு. துரைசாமி : கன்னியாகுமரியில் இருந்து மண்டபம் வரைக்கும் தமிழக அரசு போக்குவரத்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யோசிக்கப்படும்.

திருச்சி—தஞ்சாவூர் சாலை

*174. வினா.—திரு. வை. சுவாமிநாதன் : } மதிப்பிற்குரிய பொதுப்
திரு. கே. விநாயகம் :

பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி—தஞ்சாவூர் சாலையில் அதிகரித்துள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மேற்படி சாலையை 100 அடி அகலமுள்ளதாக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் சாலையை 26/0 மைலிலிருந்து 33/2 மைல் வரை 94 அடிக்கு அகலப் படுத்தும் செயற்குறிப்பு உள்ளது.

1967 ஜூலை 5]

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அம்மாதிரி அகலப்படுத்தும்போது, ரோட்டில் இருபுறமும் எடுக்காமல், ஒரு புறம் மட்டும் எடுத்தால், மரங்கள், கட்டடங்கள் முதலியவை பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதை யோசித்து, சர்க்கார் அந்த முறையில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இருபக்கமும் 150 அடி அளவிற்கு அமைக்க மூன்று லட்ச ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. இரட்டிப்பு மடங்கு செலவு இருபக்கமும் போடுவதால் ஆகும் என்றிருப்பதால், நெடுஞ்சாலைத் துறையினர் ஒரு பக்கத்திலே 12 அடி தூரம் எடுப்பது என்கிற முடிவிற்கு வந்து அந்த முறையில் செய்யப்படுகிறது. ஆகவே, பாதகம் எதுவும் ஏற்படாது.

திரு. கே. விநயகம் : ஐயா, இந்த நெடுஞ்சாலை இப்பொழுது சொல்லப்பட்ட விவரத்திலிருந்து 24 மைலிலிருந்து 32 மைல் வரைக்கும் 94 அடி அளவில் எடுக்கப்படும் என்று தெரிகிறது. திருச்சியிலிருந்து தஞ்சைவரைக்கும் இந்த நெடுஞ்சாலையின் அகலம் இப்பொழுது எவ்வளவு? 100 அடி அளவிற்கு விரிவு படுத்த அதற்கு என்ன செலவு ஆகும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தஞ்சையிலிருந்து திருச்சி வரை இந்தச் சாலையின் பெரும் பகுதி தஞ்சையில் இருந்தும், அங்கே போக்குவரத்து நெரிசல் இல்லை. ஆனால், திருவெறும்பூர் பக்கத்தில் இருக்கும் பாய்லர் ப்ளாண்ட், இன்னும் வேறு நிறுவனங்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. ஆகவேதான், தஞ்சையிலிருந்து 26 மைலுக்குப் பிறகு தொடங்கி, 33 மைல் அளவிற்கு 94 அடி சாலை போட இருக்கிறது.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : சார், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் ஒரு பெரிய தொழில் நகரமாக இருப்பதால், சேலத்திலிருந்து. . .

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி திருச்சி--தஞ்சை நெடுஞ்சாலை பற்றியது. துணைக் கேள்விகள் அதைப் பற்றிக் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, திருச்சி-தஞ்சை சாலையில் நகரத்தை ஒட்டி ஒரு மைல் தூரத்திற்கும் அதை இணைக்கும் சென்னை-திருச்சி புது சாலையிலும் மின் விளக்குகள் போட்டு வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைப்பற்றி மின்சாரத் துறையினரைக் கலந்து அது பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி-தஞ்சை சாலையில் திருவெறும்பூரில் பாய்லர் தொழிற்சாலை இருப்பதாலும், வேறு சிறுதொழில் நிறுவனங்கள் இருப்பதாலும், ரீஜினல் காலேஜ் இருப்பதாலும், அங்கே ஏராளமான தொழிலாளர்கள் வசிப்பதாலும், கிட்டத்தட்ட

5,000-க்கும் மேற்பட்ட சைக்கிள் போக்குவரத்து இருப்பதாலும், அவர்களுக்கென்று ஒரு தனி ரஸ்தா அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சைகிள் செல்வதற்கென்று தனி ரஸ்தா அமைப்பதாக இல்லை. ஆனால், அந்தச் சாலை விரிவு படுத்தப்பட்டு, அகலப்படுத்தப்படும்போது, சாலையில் வாகனங்கள் போகமுடியும் என்று கருதலாம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: இந்த தேசிய பெரு வழிச்சாலை, ஹைவேஸ் என்றெல்லாம் பலவற்றில், பல பகுதிகளில்தான் போடுகிறார்களே, அதில் இத்தனை அடி அகலத்திற்கு நேஷனல் ஹைவேஸ் போடவேண்டும் என்று ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆங்காங்கே உற்ற வசதிக்கு ஏற்ப சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன.

Valayamadevi—Neyveli Road.

*175. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether its is a fact that the Valayamadevi Neyveli Highway road has been washed away to a distance of 100 feet at Muthukrishnapuram due to the recent cycline and heavy rains; and

(b) was it repaired twice?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். இரு தடவை 20—10—1966-லும், 12—1—1967-லும் முத்துகிருஷ்ணபுரத்தில் ¾ மைல் அருகில் நெய்வேலி—வளையமாதேவி சாலை 400 அடி நீளத்திற்கு அறுத்துக்கொண்டு போகப்பட்டது.

(இ) அறுத்துக்கொண்டு போகப்பட்ட சாலை இருதடவை அந்த இடத்திலுள்ள செங்கட்டுக்கல்லாலும் சரளைகளாலும் தற்காலிகமாக அமைக்கப்பட்டது.

திரு. கே. விநாயகம்: ஐயா, பெரும்பாலும் புயலாலும், அதிகமான மழை பெய்வதாலும், இந்த இடந்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்பதால், 'easily susceptible for repairs' மேலும் புயல் வராது, மழை பெய்யாது என்று சொல்ல முடியாது என்பதால், அமைச்சர் குறிப்பிட்டபடி தாற்காலிக வேலையை விட்டுவிட்டு, 'பர்மனன்ட் ரிபேர்' செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியாதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி அறுத்துக் கொண்டு போகாமல், அன்று முழுவதும் போக்குவரத்துக்குப் பயன்படும் அளவில் பாலம் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது; இரண்டு லட்சம் செலவில் மதிப்பீடும் தரப்பட்டுள்ளது.